(Tamil)

1871
12/21

Part - III

2914 — 6 - P

Congress Pattu

Bhagath Singh, Rajaguru, Sukhadev

Thookku Uttaravu

~~Mandar Bagam~~ Irandam Bagam.

2914/Tamil

11

---

Congress song.

Bhagat Singh, Rajaguru, Sukhdev

Capital punishment.

2nd Part.

14

16

IMPERIAL RECORDS 29.2.39


தேசபக்தர்களின் புகழை தேனைப்போலினிக்கச்செய்யும்

# காங்கிரஸ் பாட்டு.

## பகவத்சிங், ராஜகுரு சுகதேவர் தூக்குதண்டனை.

இரண்டாம் பாகம்

162 b




V. R. ஏழுமலைப் பிள்ளை யவர்களால்,

தமது ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பித்தது

ரிஜிஸ்டர்ட்] 29-9-31 [விலை அணா 2

NATIONAL ARCHIVES LIBRARY
No 2914
Date 7-372
GOVT. OF INDIA

உ

ஸ்ரீவேலுமயிலும் துணை.

தேசபக்தர்களின் புகழை தேன்போலினிக்கச் செய்யும்

# காங்கிரஸ் பாட்டு.

(மூன்றும் பாகம்)

பகத்சிங், ராஜகுரு, சுகதேவர்.

தூக்குதண்டனை.

காலக்கொடுமையே மேலுக்கு மேலாக என்றமெட்டு.

கண்ணிகள்

பாரத தேவியின பக்தனை திவ்ய
பஞ்ச நதி சிங்கம் போச்சே
வீரத்யாகியான சர்தார் பகதத்சிங்கும்
விண்ணுலகம் சேரலாச்சே பா
சர்தார் கிருஷ்ண சிம்மன் செய்தவத்தினல்
சற்புத்ரனய் உதித்தாரே

பெற்றோர்க்கடங்கியே பள்ளியில் சிலநாள்
பெருமையுற வாசித்தாரே பா

கல்வியரிந்து சிலகாலத் திற்குள்ளே
காங்கிரஸ் சபையில் சேர்ந்தாரே
தொல்லை யகற்றவே தேசியக் கொடியை
தென்புடன் தாங்கித் தேர்ந்தாரே பா

பத்தொன்பது இரு பத்தொன்பது ஆண்டில்
பரிவாய் ஏப்ரல் எட்டாம் தேதி
தத்தர் பகத்சிங்கும் விட்ட வெடிகுண்டால்
தான் மாண்டனரையா ஜோதி பா

எத்தனையோ பேர் எடுத்திதை பேசியும்
ஏதும் பயனில்லை பாரு
புத்திமான் களிவர் போலெந்த ஜென்மத்தில்
பார்ப்போமையா நாமும் கூரு பா

தேசத்தொண்டரிவர் தன்னையே ஆயிரத்
தொளாயிரத்து முப்பத் தொன்றில்
மார்ச்சுமாதம் இரு பத்தி மூன்றும்தேதி
மாலை ஏழேகால் மணிக்குள் பா

பகத்சிங்கும் ராஜ குரு சுகதேவரும்
பற்றி தூக்கில் மடிந்தாரே
அகமது ஆடித்து அவனியில் பலரும்
அலரி கண்ணீர் வடித்தாரே பா

வேகிநாரணர் வகையிலுதித்துமே
வேல்முருக னருளாளே
யோகனரை மனதில் நினைத்துசொன்னேன்
மைந்தன் தியாகராஜன் கேளே பா



S. R. BOMANJI

தேசீய செல்வச்சீமான்

புனு கர்னவதாரரான

# S. R. பொம்மன்ஜி பேரில்

தாரணியில் அன்புகொண்ட என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பூலோகம் செழிக்க வந்த பொம்மன்ஜி சீமான்
பொம்மன்ஜி சீமான் நாம் நம்பிடும் பூமான் இந்த பூ
பூனு தேசாதி பதி
புண்யராம் சேது பதி
மானபி மானம்பூண்ட மாகுணநிதி இந்த பூ
கதர் கொடி நாட்டினார்
கனப் பேயை ஓட்டினார்
சதமெனவே காந்தியின் கைராட்டைப்பூட்டினார் இந்த பூ
சோதரர் ஜெயம் பெறவும்
தேசீயம் செழிப் புறவும்
மாதம்பத்து ஆயிரம்பொன் மகிழுடன் தரவும் இந்த பூ

சுயராஜ்யம் வருக வென்று
சுதேச மக்களுக் கன்று
ஜோதி யுரவே ப்ரசங்கம் செய்திட்டார் நின்று இந்த பூ

சந்தச் சரபக் கவி
சாகரப்போல் தங்கும் புவி
மைந்தன் தியாகராஜன்தமிழ் மொழிந்தனன் தாவி. இந்த பூ

---



DR. KITCHLU·

சுதேசி வீர சிங்கங்களாகிய

## சத்தியபால் கிச்சலு பேரில்

பாண்டியனீன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி.

பாங்கான சத்தியபாலன் முஸ்லீம்கள்
பகர் கிச்சிலுசீலன் பா

அநுபல்லவி.

நீங்காத நித்திய கோலன் நிருபர்கள்
நிகழ்த்தும் விசாலன் பா

தொகையறு.

பஞ்சவர்கள் தேவியாம் பாஞ்சாலி நகர்தனில்
பக்த்தராய் இருவரும் தோன்றி
அஞ்சாதநெஞ்சமே அனுதினம் தேசீய
அன்பர்கட்களித்தார் நன்றி
ஷை பல்லவித்தொடர்
புண்யவான் உடல் பொருளாவி மூன்றையும்
விடுக்கும் மேதாவி ப்ா
ஷை அநுபல்லவித்தொடர்
கண்யமாய் காங்கிரஸ் சபைமேவி ப்ரசங்கம்
விளக்கும் சஞ்சீவி

தொகையறு.

தன்மையுடன் பொருணயம் சொன்னயங்
தன்னையே தழுவிப்பேசும்
எண்ணிலா கல்வியை அறிந்த சுசீலராம்
எதிரில்லா நயமே வீசும்
ஷை பல்லவித்தொடர்
ஜாதியின் பேதம் நீக்கினுர் சாந்தியின்
சங்கம் நோக்கினுர் பா
ஷை அநுபல்லவித் தொடர்
நீதிசேர் சீரை தூக்கினுர் தொல்லைகள்
தன்னைபோக்கினுர்.

தொகையறு.

மேன்மையுறும் பஞ்சாப்பில் மேதாவிகள் சபையில்
மிகசால்யன் வாலாத் தோப்பில்
ஆண்மையாய் மன்றுடி டையரா லுண்டான
அகோர கொலை தன்னைப் போக்கி

ஷ பல்லவித்தொடர்

நன்றியே புரியும் புண்ணியன் பாரத
மாது கண்ணியன் பா

ஷ அநுபல்லவித் தொடர்

அன்பனும் தியாகராஜனின் கவியை
யாதரிக்கும் லாவண்யன்

---

## கைராட்டினம் பாட்டு.

ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே தினம்
அல்லாஹு அக்பரென்று ஆடுராட்டே
நாடு செழித்து வெகு நன்மையுறவே நீ
நாட்டங்கொண்டு வாட்டமுடனாடுராட்டே ஆ
2. மதுவை விலக்குமென்று ஆடுராட்டே உலகில்
மனதின் வருத்தமதை போக்குராட்டே
சதமென இவ்வுடலை தானே மதித்து ஏனோ
சாகவே துன்னுகிறீரென்றாடுராட்டே ஆ
3. வெளிநாடு ஆடைகளை யொழிக்கவேண்டும் நாம்
வேண்டியே கதருடையுடுக்கவேண்டும் நாம்
துளிர்த்து அவ்வாடைகள் சுகமுருமானல் நாளை
சுயராஜ்யம் வருகுமென்றாடுராட்டே
4. விஷ்ணுவின் சக்ரம்போல் சுழலும் ராட்டே எங்கும்
விருதுபோல் தேசியக்கொடி நாட்டுராட்டே
கஷ்டங்களனைத்தையும் ஒழியும் ராட்டே நம்
காந்திமகான் பேரைச்சொல்லி ஆடுராட்டே ஆ
5. அடிமைத் தொழில்தனை விலக்கும்ராட்டே வெகு
ஆனந்தங்கொண்டு சுழன்று ஆடுராட்டே
கடுமையான நமது கஷ்டங்களெல்லாம் இப்போ
கணத்தில் துலையுமென்று ஆடுராட்டே ஆ

6. சூதுடனே காமக்குரோதம் தன்னை நீக்கி பெருந்
துன்பமுதல் யாவையும் விலக்கிப்போட்டு
வாது புரிந்தே யுலகில் சண்டை வலித்தே நாளை
வேதனைக் குள்ளாகாதீரென் றாடுராட்டே ஆ

7. பம்பரம்போல சுழன்று ஆடுராட்டே அன்னை
பாரதி தேவியினடி தேடுராட்டே
வம்புந்தும்பும் வேற்றுமையும் விட்டுநீக்கி— நீங்கள்
ஒற்றுமையா யிருமென்று ஆடுராட்டே ஆ

8. மந்திர முறைத்த காந்தி மொழிபோலே உங்கள்
மனைவி மக்களுடனே புவிமேலே
சந்தக்கவி தியாகராஜன் பாடலைக்கேட்டு அதிக
சந்தோஷங் கொண்டே நீபாடி ஆடுராட்டே ஆ

## மதுரை பாஸ்கரதாஸ் பாடியது.

### இராகம்-இந்துஸ்தானி, தாளம்-ஆதி.

#### பல்லவி.

நம்பிக்கை கொண்டெல்லோரும் கை
ராட்டை சுற்றுவீர் கை
ராட்டை சுற்றுவீர் சுய
நாட்டை பற்றுவீர் தினம்

#### அநுபல்லவி.

ராணுவ பலன் நமக் கேது கதர்
ராம பாண மிது போது எங்கும்
நடைபெறும் வெதிரிய மலரிய அடியொடு
காளும் தப்பாது

#### தொகையறு.

வேலை யற்றிருக்கும்போது
விளையாட்டாய் நூற்கலாமே
மீறிடும் பசுநோய் பஞ்ச
வினைக ளெல்லாம் போக்கலாமே

V. R. ஏழுமலைப் பிள்ளை யவர்கள் பதிப்பித்த வள்ளித்திருமணம்
டிராமா அவசியம் பார்க்கவும் விலை அணா-4.

சோலை சூழ் கிராமந் தோறும்
சுகம்பெற பார்க்கலாமே
சோம்பலும் குடியும் காமத்
துயரமே தீர்க்கலாமே
ஷை அநுபல்லவித் தொடர்
காந்தி முனிவர் திரு வாக்யம் தினம்
கனவிலும் மறவாதே யோக்யம் இனி
கங்கண மணிகுவீர் மங்கள பாஸ்கரன்
சங்கீத ந

## சீ. ஆர். தாஸ் சிறப்பு.

இராகம்-இந்துஸ்தான் தோடி, தாளம்-ஏகம்.

இந்துநேச வங்கதேச பந்துவை யிழந்தனம்
என்னகால மென்று ஓல மீட்டுமேதளர்ந்தனம்
சென்றரோமடந்தை வாழும் தீரசித்த ரஞ்சனம்
சீர்மிகுத்த பாரதத்தாய் திலகநேத்ர அஞ்சனம்
ஈடில்லா தங்கம்
எதிரிக்கோர் சிங்கம்
கிரீடிப்போல் அங்கம்
கீர்த்தி ப்ர சங்கம்
கேட்டபேர்கண்ணீர் வடிக்க
நாட்டுளோரர் மனந்துடிக்க இ

தொகையறு.

ஆயிரத்தி யெண்ணூற்றி யெழுபது நன்
னவம்பரைந்து தேதி தன்னில்
அரும்பூபன் மோகனதாஸ் புத்திரரா
யவதரித்து அரிய கல்வி
நேயமுடனிருபதாம் வயதினிலே
நேர்ந்த திரு நாடமோங்க

V. R. ஏழுமலைப் பிள்ளை யவர்கள் பதிப்பித்த கந்தனூர் டிராமா அவசியம் பார்க்கவும். விலை அணா 0 4 0

நிருதர் வளர் சீமையிலே படித்து
சட்டமுறை நீதி வாய்ந்தே
தூயகுண தாதாபாய் பார்லிமெண்டிலிடம் பெறவே
துணையாய் நின்றார்
இந்துமுஸ்லீம் சோதரரை யிகழ்ந்த ஜான்மக்ளீனை
துண்டிக்கச் செய்தார்
தேயமெல்லாம் கொண்டாடும் அரவிந்தர் கோஷ்
கேஸ்தனை ஜெயித்தார்
மற்றும் தேசபக்தர் கேசுகளில் தர்மவக்கீலென
உழைத்தா ரவர்தெய்வம் போலே

ஷை பாட்டு எடுப்பு.

அந்த தியாகமூர்த்தி வாழ்வும்போச்சே
ஆகம்வெந்து சாம்பலாச்சே

தொகையறா.

கண்யானந்த தந்தைபட்ட பதினாறுலக்ஷ
மணிக்கடனைத் தானாய்
திண்ணமுடன் சம்பாதித்து அனைவருக்கும் ப்ராக்கியின்றி
தீர்த்து பின்னும்
எண்ணரிய பொருள்திரட்டி தானமீந்து ஒத்துழையா
இயக்கம் போன்ற
புண்ணியவான் ஆஸ்தியெல்லாம் பொது நலத்திற்கே
கொடுத்தார் இது புதுமைதானே

ஷை பாட்டு எடுப்பு.

உடலிருந்தால் மீண்டும் பிறந்து நாட்டில்
சிறந்துதொண்டு புரிவேனென்ற இந்து

தொகையறா.

வங்காள ஆள்தூக்கி சட்டமது தொலையாத
வருத்தத்தாலே
இங்காரும் கவனிப்பா ரில்லையென பொன்
னுலகேகி சத்துரு

கள்ளுக்கடை மரியல் பாட்டு 1-2-3-4 பாகமும் அவசியம் பார்க்கவும்
விலை அணா 0—6—0

சங்கார கடவுளுக்கும் கோகலேக்கும்
திலகருக்கும் தாதாபாய்க்கும்
பொங்காமற்பொங்கி முறையிடப் புகுந்தாரென்று
நாமனைவரும் மனம் பொருப்போமையா

ஷை பாட்டு எடுப்பு.

பூவில் பாஸ்கரன் சொல்லேந்தி
நாவில் கூறு வோமே சாந்தி

---

## குதம்பைசித்தர் வர்ணமெட்டு

சாத்வீக போராட்டம் தானே தெரிந்தவர்க்கு
ஆத்திரமேதுக்கடி குதம்பாய்
ஆத்திரமேதுக்கடி சா

ஆத்மசக்தியால் ஆகும் ஜெயம்மேலே
பேய்த்தன மேதுக்கடி குதம்பாய்
பேய்த்தன மேதுக்கடி சா

கல்லாடையாம் கதர் நாமே செய்யும் நாளில்
மல்லாடை ஏதுக்கடி குதம்பாய்
மல்லாடை ஏதுக்கடி சா

எப்போதும் ராட்டினம் ஏந்தும் கரந்தனில்
துப்பாக்கி ஏதுக்கடி குதம்பாய்
துப்பாக்கி ஏதுக்கடி சா

சத்யாக்ரகநிதி தாய்நாட்டிலே ஜாதி
வித்யாச மேதுக்கடி குதம்பாய்
வித்யாச மேதுக்கடி சா

வாழ்வுண்டு பாஸ்கரன் வாழ்த்தும் தமிழ்நாட்டில்
தாழ்வென்ப தேதுக்கடி குதம்பாய்
தாழ்வென்ப தேதுக்கடி சா

---

V. R. ஏழுமலைபிள்ளை யவர்கள் பதிப்பித்த அரிசந்திரா டிராமா
அவசியம் பார்க்கவும் விலை அணா 0 4 0

# பாரதநாட்டுச் சிறப்பு.

இராகம் இந்துஸ்தான்.தோடி, தாளம்-ஆதி

கண்ணி

பாரினிலேபுகழ் பாரதபுத்திரரே தேச
பக்தமித்திரரே பப
ஊரினிலே பஞ்சம் ஓங்குவதைப் பாரு
ஒன்றுபட்டு நேரில் நின்று தொட்டு கூறு பா
தொகையறு
வஸ்திரத்தில் பலகோடி மதுவகையில் பலகோடி
வருடந்தோறும் நாம்
கிஸ்திபோல் செலுத்துகின்றோம்
கேவலமாய் வருந்துகிறோம்
இது கீழ் நாடென்றே நாம்
எத்தனை நாள் படுத்திருப்போம் அந்த நித்திரை
தெளிந்தெழவேண்டாமா நாம்
சத்தியமாய் காந்தி மகான் சாத்மீகப்போர்
முனைக்கே சேர்வோம்
ஷை-கண்ணித்தொடர்
சுதருடித்திடில் வெற்றிசுதந்திரமே எதிர்
காணு மந்திரமே
முத்தமிழ் பாஸ்கர வித்வமுற்றுவோமே
மூட்டை தூக்கிடாமல் ராட்டைச்சுற்றுவோமே பா

---

# பஞ்சாப்பில் நடந்த படுகொலைக் கீதம்.

காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டின் மகுடங்கள்

பல்லவி.

பஞ்சாப் படு கொலை
பாரீர் கொடியது பழிபவமுடையது பா

### மகுடங்கள்.

அஞ்சாப் பெருவம்பென
அறநிலை தப்பிய சிறியவன் வேலை ப

படைக்களத்தினு துடைக்கலாமென
மடக்கருத்துட னிடக்கலாமிரு ப

தாயும் தந்தையும் சேயினிழந்ததாய்
போய் கரைதனி லேயுமுன்னிட ப

பிற-தேயத்தார் அனியாயத்தால் செய்
மாயத்தால் பலர் மாண்டிட வந்தது ப

இந்தியர்கள் வருந்தியலைந்திட
நொந்து கலங்கிட அந்தோசெய்தது

கற்புக்கரசிகள் பொற்பழிந்திட
கற்பழித்தது செப்பத்துயருரும்

கண்ணீர் விட்டுக் கதறிக்கதறித்
தண்ணீர் கேட்டுச் சாய்ந்து மடிந்தனர்

இழுத்துகை நகங் களிலே ஊசி
அழுத்தித்தள்ளிட அரைந்து அரைந்தது()

படுக்கவைத்துகை மடக்கி வைத்துடல்
நடுக்கமுற நகத் தூசியும் குத்தின ப

வந்தியமழையாரிடை யாடை யறிந்து
சாய்ந்திடவே எரி தாருமணிந்தது ப

மடித்தவாயினர் முடுக்கடோருமே
நடுக்கமுற்றிட திடுக்கிடும்படி ப

நம்-நாட்டுநேசர் தோட்டந்தன்னிலே
வாட்டியே கொல்லும் சேட்டையானது ப

இந்தியரே யிந்த படுங்கொலைநின்றிட
மந்திரமே செய்து சுகங்களைப் பெற்றிடும் ப

அஞ்சொலின் மாதரை பச்சைகளாக்கியே
துஞ்சவலித்தது நெஞ்சுபடைத்திட ப
தாரணி மங்கையின் மார்பில் புரண்டு
ஊர்ந்து உருண்டுயிர் சோர்ந்து மறைந்தது ப
அண்டையில் நின்றவர் துண்டமாக வெட்
டுண்டு மடிந்திட குண்டுகள் பட்டது ப
பங்கமிருந்தது பயன் கொளவங்க
முழிந்த பிணங்கள் ரணங்கரைந்தது ப
தேச நேசவிசு வாசன் வி. எ. செல்வ
ராஜன் போற்றும் சி. ஆர். தாஸர் சொற் கருத ப

---

# மகாத்மாகாந்தி சிறைவாசச் சிறப்பு

## ந்தொன்பதாம் நூற்றுக்கு மேல் என்றமெட்டு

கண்ணிகள்.

பாரதமாதா பெற்ற பாலர்களே நமக்கு
பாரில்சுயராஜ்யம் பெற பாடுபட்ட மகானை
பரதவிக்கும்படி விட்டார்
பாமனு மிப்படி பா
சாதகமாக வளர் சர்க்காரிடமே கேட்டால்
நூதனமான சட்டம் நூத்திநாற்பத்தி நாலாம்
நொடிக்குள்ளே அரஸ்டாம் என்றும்
பிடிப்பதும் தூரட்டாம் பா
துன்மதி மாசிமாதம் தொடர்ச்சி இருபத்தேழில்
தூய ஆமதாபாத்தில் துயருறவே காந்தியை
துரிதமாய் பிடித்தார் ஆறு
வருடமென்றடைத்தார் பா
காந்தியை பிடிப்பதற்கு கண்ணில்லையோ கடவுளுக்கு
சாந்த சங்கல்பம் செய்யும் சாத்மீகரை விலக்க

---

சுயராஜ்யப் பாட்டு 1 2 3 4 பாசங்கள் அவசியம் பார்க்கவும்
விலை அணா 0 6

சாதுக்கள் யாரோ வந்து
பாதுகாப்பாரோ பா

சவுக்கதலி மகம்மதலி சமர்த்தர் சிறையிருந்தார் பா

சஞ்சலம் சகலருக்கும் நெஞ்சமதிலே யில்லாமல்
சாற்றியே மொழிந்தார் சிறைச்
சாலையில் புகுந்தார் பா

ஆஸ்தியால் வாங்குறார்கள் ஆனரபில் என்னும் பட்டம்
ஆண்டவனுல் நம் காந்திக்கு அழியா சிரஞ்சீவி பட்டம்
ஆனதால் நமக்கு பயம்
ஆகமதி லெதற்கு பா

திருவள்ளுவர் புரிந்த தீதற்ற நெசவுத் தொழில்
பெரும்பாலும் நாமே செய்தால் யிணையில்லை தாரணியில்
பிடித்திடும் ராட்டே காந்தி
பிரியத்தை ஊட்டே பா

தேசாபிமானியெல்லாம் தியங்கி மயங்குறார்கள்
ஈசன் செயலே யன்றி காசினியில் வேறேயில்லை
இறைவனைப் பணிவோம காதல்
குறவஞ்சி அணைவோன் பா

வஞ்சமில்லா இந்தியர்கள் வாழையடிவாழையென
கொஞ்சம் மனக்கவலை குவலயந்தன்னை நாடி
கூரும் கார்மேகம் தமிழ்
கூர உற்சாகம் பா

## கைராட்டின மகிமை,

### இராகம்-வராளி, தாளம்-ஆதி.

### பல்லவி.

கைராட்டினமாம் அம்மா கைராட்டினமாம் நமது
காந்திமகான் சொன்ன கைராட்டினமாம் கை

### அநுபல்லவி.

வையகத்தில் உள்ளவர்கள் ஆதியில்
வழங்கிவந்த நல்ல கைராட்டினமாம் கை

மகுடங்கள்,

கதராணிந்திடில் வெற்றி கொடுத்திடும்
சுத்தர் மெச்சிடும் சுதேசி நலம் பெற
சித்தரஞ்சன தாசர் மகிழ்ந்திடும் கை
வருட மொன்றுக் கறுபது கோடி
மதிப்பு ரூபாய் நமக்குலாபம்
தருமாம் பெண்கள் திருவாணமதை
தடுத்து மானம் கெடுக்கவந்த கை

தொகையறு.

ஒரு பருத்தி செடி நூறு சேர் பருத்தி விளையுது அதில்
ஒருவருக்கு கால் சேர்போதும் அதை
நூல் நூற்று இடையில் தரித்தால்
இரண்டு வருடத்திற்குதவுது ஒருவருக்கு
இருபது கோடி லாபமுண்டு
அதனால் மதிப்புமுண்டு
ரோஷமுண்டு தைரியமுண்டு இதைப் பெருகுவீரே கை

## லோகமான்ய பாலகங்காதர திலகம் என்ற மெட்டு

### இராகம்-இந்துஸ்தான் பியாக், தாளம்-ஆதி.

பல்லவி.

சுயாராஜ்யம் அதிக தூரமில்லைத் தெரிவீர்
துணிந்து மதுவிலக்க துணைகொள்வீர் சு

அநுபல்லவி.

துயரான இந்துதேச சோதர சோதரிகாள்
தூயாமகாத்மா காந்தி செல்லையறிவீர் சு

தொகையறு.

பஞ்சமாபாதக மைந்து மூன்றில்
பலகலையுணர்ச்சி செய்த பாழான குடியே
பகர் மக்தியான வேளை பகர் சூதாடும் குடியே

---

"கிராம்போன் சங்கீதக் களஞ்சியம்" 8-பாகங்களும் ஒரே கட்டடம் செய்தது. விம்ப்பைண்ட் விலை அணா 0—12—0

பாட்டு.

தேசத்திற்கே உழைக்க தேகமெடுத்தகாந்தி
நேசத்துடனுரைத்தார் ராட்டை கை யேந்தி சு

தொகையரு.

பாசத்துடன் நூல் நூற்று பந்து கை தரிவிட்டு
நாம் தரிப்போம் நூலால் பலவகைதினுசுபட்டு

பாட்டு.

புவனமதிலிலகும் பூமான் மகாத்மா காந்தி
போதிக்கும் புத்திகளை உணர்ந்திடுவீர்
முன்னோர் பெயரைக்கெடுத்த மூடக் குடியைவிட்டு
முன்னே பாஸ்கரன் சொல் முழங்கிடுவீரே சு

மதீனமே மோரேசையா என்றமெட்டு.

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

பல்லவி.

கை ராட்டினத்தால் நூலை நூற்று சுகமடைவோம்
ராஜ போகமடைவோம் கதர் உடையணிவோம்
காந்தி அடிபணிவோம் கை

அநுபல்லவி.

தேட்டமாய் நாமே திடங் கொள்ளுவோமே
தாட்டிய யாட்சிமுறை யூட்டிடுவோம் வாழி
காட்டிடுவோம் கொடி நாட்டிடுவோம்
சீரியதை நாடி சிறப்போடு கூடி
சித்தம் வைத்துழைத்திட வாருங்களே விடை
தாருங்களே ஒன்றாய்ச் சேருங்களே கை
காந்திமகான் சொல் ஏந்தி சதாநில்
காஜாமொய்தீனின் கீதம் படித்திடுவோம் கொடி
பிடித்திடுவோம் கதர் உடுத்திடுவோம் கை

தேசாபிமானிகளின் புகழை தேன்போலினிக்கச்செய்யும்
காங்கிரஸ் பாட்டு 3-ம் பாகம் முற்றிற்று,

---

இதன் தொடர்ச்சி நான்காம் பாகம் அவசியம் பார்க்கவும்.

உண்மையும் உத்திரவாதமும் உபயோகமுள்ள

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றுள்ள

# அமிர்த சஞ்சீவி தாதுவிர்த்தி லேகியம்.

தாங்கள் அடையவேண்டிய இல்லர சுகத்தை இந்த லேகிய பஸ்பத்தால் கட்டாயம் பெருவீர்கள் அதாவது, எந்தகாரணத்திலேனும் இழந்துபோன உதிரப்பசை என்னும் ஜீவாதாரத்தைப் பழையபடி கொடுத்து ரக்ஷிப்பதற்கு இந்த அமிர்த சஞ்சீவி லேகியம் வரபிரசாதம் பெற்றது. ஒரு மண்டலம் என்னும் 48-நாள் யாரொருவர் ஷை அமிர்த சஞ்சீவி லேகிய பஸ்பத்தை சாப்பிட்டபோதிலும் அவர்களுடைய திரேகத்திலுள்ள கெட்ட இரத்தத்தைப்போக்கி பரிசுத்தமான உதிரத்தை உண்டாக்கும். தேகமிகவலுத்து புதியரத்தத்தை பெருக்கி சப்த நரம்புகளுக்கும், இடுப்புக்கும், அதிக வலுவைக்கொடுத்து மூத்திர சம்பந்தமாய் விளங்கும் பகுமூத்திரம் அதாவது, அளவுக்கு மீறி அடிக்கடி மூத்திரமிரங்குதல் மேகவெட்டையாலுண்டான பயங்கரமான வியாதிகளனைத்தும் லேகியம் சாப்பிட்ட 10-வேளையில் முழுதும் குணமாகும். பத்திய மில்லை இதை சாப்பிடும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

| | |
|---|---|
| அரை மண்டலம் 24-நாள் சாப்பிடும் லேகியம் | விலை 2-0-0 |
| வி. பி. தபால் செலவு | 0-6-0 |
| ஒரு மண்டலம் 48-நாள் சாப்பிடும் லேகியம் | 4-0-0 |

(ஒரு மண்டலம் வாங்குபவர்களுக்கு போஸ்டு செலவுகள் கிடையாது)

## சர்வதேள் விஷநிவாரண சஞ்சீவி.

நிமிஷத்தில் விஷம் பறக்கும்.

அழுதவன் சிரிக்கும் பழுதிலா வற்புத சஞ்சீவி

குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு ரூ. 50-பரிசளிக்கப்படும். வைத்திய நிபுணர்களால் நன்குமதிக்கப்பட்டது, தேள், நட்டுவாக்களி செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

இரண்டு வித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1 க்கு அணா 8.

பாக்கெட் 12 க்கு விலை ரூ. 5 0 0

எமது விலாசம்:—பி. வி. முருகர் & கோ.

189, வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்